REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk / ThinakaranLK

2021 ஜனவரி 21 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 89 இல. 18 | January 21, Thursday, 2021 | 28பக்கங்கள் | 30/-

அதிசிறந்த anytime data பக்கேஜ்கள் 4G போனஸ் சகிதம்
www.mobitel.lk/any-time-data
SLTMOBITEL

### பாடசாலை கல்வி நடவடிக்கைகளை தாமதப்படுத்த முடியாது

## சுகாதார விதிமுறைகளுடன் பிள்ளைகளை அனுப்பி வைப்பது பெற்றோரின் கடமை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகளை தாமதப்படுத்த இடமளிக்க முடியாதென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நடைமுறையிலுள்ள சுகாதார விதிமுறைகளை பின்பற்றி பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பும் பொறுப்பை பெற்றோர் மேற்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஹோமாகம, மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் Zoom தொழில்நுட்பம் மூலம் தொடர்புகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் 06


ஹோமாகம பாடசாலை நிகழ்வில் பிரதமர் Zoom ஊடாக உரை

### இன்று முதல் விமான நிலையங்கள் திறப்பு;

## சுற்றுலா பயணிகளுக்கான சட்டதிட்டங்களில் தளர்வு

72 மணி நேரத்துக்கு முன்னதாக PCR அவசியம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டிருந்த கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் இன்று மீண்டும் உல்லாசப் பயணிகளுக்காக திறக்கப்படுகிறது. 06


படங்கள்:.சமந்த வீரசிறி

### பருத்தித்துறை மீனவரின் வலைகளை அறுத்து, கற்களால் தாக்கி

## வடமராட்சி கட

## இந்திய மீனவர்




### 15 கிலோ மீற்றர் தொலைவில் 04 படகுகளில் வந்து அட்டூழியம்



**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்.வடமராட்சி கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி, அத்துமீறி கடற் றொழிலில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள், யாழ்.பருத்தித்துறை மீனவரின் வலைகளை அறுத்து அட்டூழியம் செய்துள்ளனர். இச்சம்பவம் நேற்று புதன் கிழமை அதிகாலை இடம்பெற்றதாக 06



## புத்தளத்தில் வாழ்ந்து கொண்டு மன்னாரில் வாக்களிக்க முடியாது

### இனி இது சாத்தியப்படாத விடயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

புத்தளத்தில் வாழ்ந்து கொண்டு மன்னாரில் வாக்களிக்க முடியாது. இனிமேல் இது சாத்தியப்படாத விடயமென தேர்தல் ஆணைக்குழு தலைவர் நிமல் புஞ்சிஹேவா திட்டவட்டமாக அறிவித்துள்ளார். 06


தேர்தல் ஆணைக்குழு தலைவர் திட்டவட்டமாக அறிவிப்பு

### யாழ்.பல்கலை பேராசிரியர்கள், மாணவர்கள்;

## குருந்தூர் மலை ஆராய்ச்சி குழுவில் தமிழரும் இணைப்பு

சம்பந்தனின் கோரிக்கையை விதுர ஏற்பு



**சம்ஸ் பாஹிம் நிஷாந்தன் சுப்ரமணியம்**

முல்லைத்தீவு, குருந்தூர் மலை ஆதி ஐயனார் கோவில் பகுதியில் நடத்தப்படும் தொல்பொருள் ஆராய்ச்சிப் பணியில் 06



### மேட் இன் ஸ்ரீலங்கா; உள்நாட்டு உற்பத்தி;

## எரிவாயு அடுப்பு விரைவில் சந்தைக்கு அறிமுகம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

'மேட் இன் ஸ்ரீலங்கா' என்ற பெயரில் புதிய சமையல் எரிவாயு அடுப்பு விரைவில் உள்ளூர் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார். அத்துருகிரிய, 06



## சர்வதேச நாடுகளை அச்சுறுத்தும் கொரோனா

### 24 மணி நேரத்தில் 06 இலட்சம் பேர் பாதிப்பு



சர்வதேச அளவில் கடந்த 24 மணி நேரத்துள் 05 இலட்சத்து 85 ஆயிரத்து 749 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதற்கமைய, சர்வதேச ரீதியில் கொரோனா தொற்றினால் இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 09 கோடி 65 இலட்சத்து 99 ஆயிரத்து 687 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா தொற்றினால் 06

## தேயிலை உற்பத்தி வீழ்ச்சி; சபையில் சஜித் சுட்டிக்காட்டு

### கவனம் செலுத்த கோரிக்கை

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

சிறுதோட்ட தேயிலை உரிமையாளர் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்துவது குறைந்துள்ளமையால் தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுவருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். சபாநாயகர் 06



### ஆங்கில வைத்தியருடன் முரண்பாடு;

## தம்மிக்கவுக்கு எதிராக பொலிஸில் புகார்



கொரோனா தொற்றுக்கெதிராக ஔடத பாணியொன்றை தயாரித்த கேகாலை, தம்மிக்க பண்டாரவுக்கு எதிராக கேகாலை சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தரின் கீழ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவருக்கெதிராக பேராதனை 06

### சர்வதேச சுகாதார வழிகாட்டல்கள் முக்கியம்;

## மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து செயற்படுவதும் அவசியமானது



### அமெரிக்க தூதுவர் அலைனா கருத்து

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மத உணர்வுகளை மதிக்கவேண்டுமென இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பி டெப்பிளிட்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றினால் மரணிப்போரின்

### கொச்சிக்கடை தேவாலய குண்டுத் தாக்குதல்;

## குண்டுதாரியின் தந்தைக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட அலாவுதீன் அஹமட் முவாத் என்பவரின் தந்தையை எதிர்



### பலரது அழுத்தம் காரணமாக

## எம்.பி பதவியை ஏற்க தயாராகிறார் ரணில்?

பொதுத் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த தேசியப் பட்டியில் உறுப்பினர் பதவியை ஏற்க, கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 06 மாதங்களுக்கு மேல் வெற்றிடமாகக் காணப்படும் இந்தத் தேசியப்



### விக்கல் வீராச்சாமி



தலைவரே, நீங்க நேற்று ஆற்றிய உரை இண்டைக்கு எல்லா பேப்பரிலும் தலைப்புச் செய்தியா வந்திருக்கு....

அப்பாடா தொண்டை கிழிய கத்தி பேசினதுக்கு பிரயோசனமாக போச்சு, வடிவா போட்டிருக்கிறாங்க, பேப்பர்ல